# பால் புட்டியின் கதறலும் உடலை இழந்த உயிர்களின் ஓலமும்...!

## ‘கணையாழி’ தலையங்கம்!




கரூர் துயரம்
பதறியடித்துப் பறந்திருக்கிறார்
தமிழ்நாடு முதல்வர்!
யாரைப் பார்க்க வந்தார்களோ
அவர்கள்
யாரையும் பார்க்காமல்
பத்திரமாகப்
போய்ச் சேர்ந்திருக்கிறார்கள்?
ஆனால்
பார்க்க வந்தவர்கள்
திரும்பிப் பார்க்கவே முடியாமல்
போய்ச் சேர்ந்திருக்கிறார்கள்!
காரணம் கட்டமைக்கத்
தேடி அலைகின்றன ஊடகங்கள்!
ஒவ்வொரு நிமிடமும்
ஊதி ஊதிப் பெருக்கிப்
பிம்பத்தைக் கட்டமைத்து
மக்களை உசுப்பிக்
கூட்டிவந்த ஊடகங்கள்
தாங்களும் காரணம்
என்பதை மறைக்க
கை காட்டுகிறது அடுத்தவர்களை!
வாழ்க்கைக்கு அர்த்தம் தேடி
தங்களுக்கான குழுக்களைக்
கண்டறிய வாய்ப்பளிக்கும்
சமூக ஊடகம்தான் -
தனி மனிதர்
சமூகத்தோடு உறவு கொள்ள
உலகச் சமூகத்தை
உருவாக்க வேண்டிய
சமூக ஊடகம்தான் -
இயல்பான உலகத்திலிருந்து
மனிதர்களைப் பிரித்துத்
தனிமைப்படுத்துகிறது!
எங்கேயோ இருப்பவர்களோடு
தொடர்பில் இருக்கவும்
வீட்டில் உள்ளவர்களோடு
வெறுப்பில் இருக்கவும்
தூரத்து உரையாடலும்
அருகில் மௌனமுமாக
ஊடகத் தொடர்பு
சமூகத் தனிமையைக்
கட்டமைத்து விடுகிறது.
சிறு சிறு குழுக்களில் நெருக்கம்
பெரும் சமூகத்தில் தனிமை!
நம் வீட்டில் தெருவில்
நடப்பதில் நாட்டமில்லை
திரையைப் பார்த்துச்
சிரிப்பும் அழுகையும்!

தன் உணர்வும் அறிவும்
தேவைப்படாமல்
அடுத்தவர் பதிவில் வாழ
ஆசை காட்டுகிறது!
நம்மோடு நாம் இருக்கும்
தொடர்பைத்
தொலைக்க வைக்கிறது!
இப்போது
ஊடக ஆதிக்கத்தில்
ஊசலாடுகிறது வாழ்க்கை!
கொள்கையற்ற சேர்க்கைக்கும்
அபிப்பிராயங்களின் வேட்டைக்கும்
அலைய வைக்கிறது மனதை!
அடிப்படை புரிதல் இல்லாமல்
விருப்ப ஈடுபாடுகளின்
தலையாட்டிப் பொம்மைகளாக
விலைபோக வைக்கிறது மக்களை!
காட்சி ஊடகக்
கண்காட்சி விலங்குகளாக
மக்களை மயக்கி
வியாபாரம் பெருக்கும்
ஊடக நரகத்தில் உலகம்!
காட்சி உலகை நம்ப வைத்து
வாழும் உலகை வெறுக்க வைக்கிறது
ஊடக உலகு!
யுவல் நோவா ஹராரி சொல்கிறார்
மனிதவள வரலாற்றில்
தவிர்க்க முடியாத ஆற்றல்
முட்டாள்தனமாம்!
கடவுளும் இயற்கையும் கூட
முட்டாள்தனத்திலிருந்து
காப்பாற்ற முடியாதாம்!
அதையே மூலதனமாக வைத்து
தனிநபர் மீது நம்பிக்கைப் பிம்பத்தைக்
கட்டமைக்க வருகிறார்கள்!
கொள்கை இல்லாமல்
தனிநபரை முன்வைத்துத்
தான் முன்னேற
மக்களின் மனநலத்தைச் சிதைக்கிறார்கள்!
நமக்கே தெரியாமல்
அவர்களின் வசதிக்கு
நமது மூளையைச்
சிந்திக்க வைக்கிறது சமூக ஊடகம்!
அதிகார வேட்கையில்
தலைமையும்
வெளிச்சப் பூச்சிகளாய்

மக்களுமாக
வியாபார வேட்டையில் ஊடகங்கள்!

தலைப்படை நுங்கும்
இடைப்படை பனம் பழமும்
கடைசியில் வரும் படை
சுடுபனைக் கிழங்கும்
சாப்பிட்டுக் கடக்கும்படியான
நலங்கிள்ளியின்
பெரும்படை அணிவகுப்பைப்
பாடியிருக்கிறார்! (புறநானூறு. 225)
சங்க காலப் புலவர்
ஆலத்தூர் கிழார்!
சோழர்களின் கருவூலம்
சேரர்களின் தலைநகரம்
மேற்கு நோக்கிய பெருமாள் கோயில்
குடவரைக் கோயிலுக்குள் ஆஞ்சநேயர்!
புரட்டாசி சனியில்
அமராவதித் தாய்க்கு
உயிர்களின் படையல்!

பெண்கள் பாண்டி ஆடிய
அமராவதி ஆற்று மணலில்
குருதி ஓட்டம்!
வஞ்சி மாநகருக்கு
இன்னொரு பெயர் கரூர்!
சிலப்பதிகாரத்தில் கூட
மதுரையில்தான் கொலைக்களக் காதை!
இப்போது
வஞ்சிக் காண்டத்தில்!
அரசு சொல்வதைக்
கேட்க மனம் இல்லாத தலைமை!
தலைமைக்குக் கட்டுப்படாத
தனது கட்டுப்பாட்டில்
தானே இல்லாத
தான்தோன்றிகள் !
போர்க்களம் போல
கரூர் வேலுசாமிபுரம்!
குவிந்து கிடக்கும்
காலணிப் பிணங்களுடன்
கைக்குழந்தைக்கான
பால் புட்டியும்
கட்சிக்கொடி சுற்றி!
மன்னிக்காது வரலாறு!
இனி
காரணமானவர்களை
விரட்டிக்கொண்டே இருக்கும்
பால் புட்டியின் கதறலும்
உடலை இழந்த
உயிர்களின் ஓலமும்...!!



ம.ரா.

-நன்றி
‘கணையாழி’
அக்டோபர் - 2025

## கொளத்தூர் தொகுதியில்

## “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாம் !

சென்னை, அக்.2-
மக்களிடம் செல்; அவர்களோடு வாழ்; அவர்களை நேசி என்ற பேரறிஞர் அண்ணாவின் கொள்கைப் பாதையில் நமது தமிழ்நாடு அரசு மக்களின் மீது கொண்டிருக்கும் அக்கறைக்கு மற்றுமொரு எடுத்துக்காட்டாக “உங்களுடன் ஸ்டாலின்” என்ற புதிய திட்டத்தினை முதலமைச்சர் அவர்கள் அறிவித்ததால் தமிழ்நாட்டில் உள்ள கடைகோடி மக்களுக்கும், அவர்கள் அன்றாடம் அணுகும் அரசுத் துறைகளின் சேவைகள் / திட்டங்களை குறிப்பாக சாதி சான்று பெற, பட்டா மாற்றம் செய்ய, பென்சன் வாங்க, மகளிர் உரிமைத் தொகை திட்டத்தில் தகுதி வாய்ந்த விடுபட்ட மகளிர் பயன் பெற, மருத்துவ காப்பீட்டு அட்டை பெற, ஆதார் அட்டையில் திருத்தங்கள் செய்ய, ரேசன் அட்டையில் முகவரி திருத்தம் செய்ய” போன்ற பல கோரிக்கைகளுக்கு அரசு அலுவலகங்களுக்குச் செல்ல வேண்டிய அவசியமின்றி அலுவலர்கள் நேரடியாக உங்கள் இருப்பிடங்களுக்கு அருகிலேயே வந்து தீர்வுகளை வழங்கும் உன்னத திட்டமான உங்களுடன் ஸ்டாலின் திட்டம் இன்று கொளத்தூர் நகர் சட்டமன்றத் தொகுதியில் மண்டலம் 6 வார்டு-68 சென்னை, பெரியார் நகர்,திருவள்ளுவர் திருமண மாளிகையில் நேற்று (30/09/2025) கிழமை நடைபெற்ற “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாமினை இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே. சேகர்பாபு பல்வேறு கோரிக்கைகளுக்காக முகாமில் பங்கேற்ற பயனாளிகளுக்கு குறிப்பாக மின் இணைப்புகளுக்கான நுகர்வோர் பெயர் மாற்றம் 14 மனுக்கள் பெறப்பட்டு அந்த... மனுக்களுக்கும் தீர்வு கண்டும்

CMCHIS முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டம் 106 மனுக்கள் பெறப்பட்டு அந்த... மனுக்களுக்கும் தீர்வு கண்டும்..

ஆதார் இணைய சேவைகள் மனு 135 பெறப்பட்டு அந்த... மனுக்களுக்கும் தீர்வு கண்டும்

பிறப்பு மற்றும் இறப்பு சான்றிதழ்களில் பெயரை சேர்க்க மற்றும் திருத்தம் செய்ய கோரி - 2 மனுக்கள் பெறப்பட்டு அந்த... மனுக்களுக்கும் தீர்வு கண்டும்

சொத்து வரியை மதிப்பிடுவதற்கான விண்ணப்பங்கள் மற்றும் பெயர் மாற்றம் செய்ய கோரி 6 மனுக்கள் பெறப்பட்டு அந்த... மனுக்களுக்கும் தீர்வு கண்டும்

பட்டா நில அளவை 38 மற்றும் பெயர் மாற்றுதல் பெறப்பட்டு அந்த... மனுக்களுக்கும் தீர்வு கண்டும்

சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் (SSS) - ஓய்வூதியத் திட்டங்கள் / முதல்வர் மருத்துவ காப்பீட்டுத் திட்டம் 100 மனுக்கள் பெறப்பட்டு

அந்த... மனுக்களுக்கும் தீர்வு கண்டும்

ஆதரவற்ற குழந்தைகளுக்கான உணவுகள் நிதியுதவி திட்டம் - 1 மனுக்கள் பெறப்பட்டு தீர்வு கண்டும்

மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய அடையாள அட்டை/ மாற்றுத்திறனாளிகளுக்கான தனிப்பட்ட அடையாள அட்டை -4 விண்ணப்பம் பெறப்பட்டு தீர்வு கண்டும்

கலைஞர் மகளிர் உரிமை தொகை -272 மனுக்கள் பெறப்பட்டு தீர்வு கண்டும்

இதர மனுக்கள் -89 என மொத்தமாக 979 மனுக்கள் பெறப்பட்டு அதில் 973 மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டு அதற்குரிய ஆவணங்களை உரிய பயனாளிகளிடம் வழங்கி சிறப்பித்தார்.

இந்நிகழ்ச்சியில்இந்நிகழ்ச்சியில் பகுதி கழக செயலாளர்கள் ஐ சி எப் வ முரளிதரன், ஏ நாகராஜன் மண்டலகுழுத் தலைவர் சரிதா மகேஷ் குமார், கே.சந்துரு,சி. மகேஷ் குமார், மாமன்ற உறுப்பினர்கள் அமுதா பொன்னிவளவன், எம் தாவுத் பீ, டி.யோகப்பிரியா, மண்டல அலுவலர் சரவணன் , வட்ட கழகச் செயலாளர் ஆதவன் மணி, பி.டி.சி.ரவி மற்றும் வட்டக்கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# தலைவன்.....தொண்டன்!

கழகத் தொண்டனுக்கு
மரியாதை செய்து கழக
தொண்டர்கள் மனதில்
உயர்ந்து நின்ற அன்பு
தலைவருக்கு எங்கள்
தென்மேற்கு மாவட்ட
கழகத்தின் சார்பில்
நெஞ்சார்ந்த நன்றிகள்!

தொண்டனுக்கும்
இயக்கத்திற்கும்
உள்ள உறவு பாலத்தை
நிரூபிக்கும் வகையில்
மறைந்த பின்னும்,
அழியாப் புகழ்
எழுந்தருள,
அவரது உண்மையான
உழைப்பிற்கும்,
உங்கள் மேல்
வைத்த அன்பிற்கு,
ஜெ.அன்பழகன் பெயரை
யாவரும் அறிய,
பல ஆயிரம் வாகனம்
செல்லும் பாலத்தில்
பொறித்த தலைவரே.

அது கல் அல்ல, நன்றி
கனி;
அது எழுத்தல்ல,
உயிரின் ஒளி.



தொண்டனின்
உழைப்பை மறவாமல்
காட்டும்
தலைவரின் கருணை
நெஞ்சின் சான்று.

நன்றி மறவாத
தலைவா,
உங்களை,
இயக்க வரலாறு கொண்டாடும்;

மறைந்த தொண்டனை
கூட வாழ்விக்கும்
வல்லமை கொண்ட
தலைவா....
வாழ்க உன் புகழ்

## சவுதி அரேபியா, தமாமில் சிக்கித் தவித்த

# 3 தமிழர்கள் உள்பட 22 இந்தியர்கள் தாயகம் திரும்பினர்!

## கழக அயலக அணியினர் நடவடிக்கை!

தமாம், அக். 2-
சவுதி அரேபியா, தம்மாமில் சிக்கித்தவித்த 3 தமிழர்கள் உட்பட 22 இந்தியர்கள் நாடு திரும்ப அனைத்து உதவியையும் தி.மு.க. அயலக அணி மற்றும் தமிழ்நாடு நலச்சங்கம் இணைந்து அனைத்து ஏற்பாடுகளும் செய்து தரப்பட்டதைத் தொடர்ந்து இவர்கள் தாயகம் திரும்பினர்.

பல்வேறு சிக்கல்கள் பல்வேறு வழக்குகள் சம்பந்தமாக பல மாதங்களாக சவூதி அரேபியாவில் வேலைக்கு வந்த தமிழ்நாடு, மகாராஷ்டிரா, பஞ்சாப், கர்நாடக, கேரளா, ஆந்திர, பீகார் மாநிலங்களைச் சேர்ந்த 22 இந்தியர்கள் வழக்குகள் சம்பந்தமாக தாயகம் செல்ல வழி இல்லாமல் சிக்கி தவித்து வந்தனர்.

தி.மு.க. அயலக அணி நிர்வாகிகள் மயிலாடுதுறை வெங்கடேசன் தி.மு.க. அயலக அணி முன்னாள் துணை அமைப்பாளர் திருச்சி ஆரிஃப் மஃபூல் தலைமையில் நாடு திரும்ப ஆவன செய்தார்கள்.

இந்தியத் தூதரகத்தின் மற்றும் சவூதி அரேபியா அரசாங்கத்தின் கடந்த ஒரு மாத காலமாக கடுமையாக முயற்சிகளை அயலக அணியினர் செய்தனர்.

இதன் காரணமாக மேற்குறிப்பிட்ட மூன்று தமிழர்கள் உள்பட 22 இந்தியர்களை ( Final Exit )இறுதி பயண சான்றிதழ் பெற்று அவர்களிடம் சவுதி அரசாங்கம் இந்திய தூதரகம் ஒத்துழைப்புடன் வழங்கப்பட்டது இதனைத் தொடர்ந்து அவர்கள் நாடு திரும்ப அனுமதிக்கப்பட்டனர்.

இதற்காக அவர்கள் அனைவரும் நன்றிகள் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் TNWA தமிழ்நாடு நலச்சங்க செயலாளர் முகவை சீனி முகமத் & இணைச்செயலாளர் துறையூர் கமால் பாஷா, & தொழில்நுட்ப அணி சென்னை இம்ரான் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டவர்கள் கேரளா சமூக செயற்பாட்டாளர் :

நாசு சவுக்கத் அலி இலங்கை சமூக சேர்ப்பாளர் : நவரத்தினம், கர்நாடக செயல்பாட்டாளர் ஹனீபா, தமிழ்நாடு நலச் சங்க நிர்வாகிகள் முஹம்மது நூஹு, அபூரையான், திருச்சி யூனிஸ் முகம்மது பாரூக், விளையாட்டு அணி நூர் முகமது, இளைஞர் அணி ஜான், ஏர் போர்ட் கணேசன், ஆனந்த் ஆகியோர் உடன் இருந்தனர்.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## வீரபாண்டி ஆ. இராஜா

## அக்டோபர் 2 (2021)



**தனது இளமைப் பருவத்திலேயே தனது தந்தையாகிய வீரபாண்டியாரின் வழியில் கழகப் பணியாற்ற தொடங்கியவர்.**

**மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர், மாவட்டச் செயலாளர், தேர்தல் பணிக்குழுச் செயலாளர் என கழகத்தில் பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.**

**வீரபாண்டி சட்டமன்றத் தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.**

**கழகம் அறிவித்த போராட்டங்கள் அனைத்தையும் முன்னெடுத்து நடத்தியதோடு, அதில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், “சேலம் மண்டலத்தில் கழகம் வளர்க்கும் வீரனாக வலம் வந்த தம்பி வீரபாண்டி ராஜா” என்று தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**